(1)

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029148

1. District : மாவட்டம் சேலம். PS: காவல்நிலையம் ஊதக பிரிவு Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 2/AC/2018 Date: நாள் 9/1/2018.

2. (i) Act சட்டம்: ஊ.த சட்டம் 1988. Sections பிரிவுகள்: 7.
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   1) 11.12.2017 - செல்போன் மூலமாக
   2) 12.12.2017 - பகல் 12.30 மணி சேலம் தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகம் அருகில்
   3) 08.01.2018 - மாலை 6.30 மணி, சேலம் தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகம், கோரிமேடு, சேலம்.

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.01.2018 Time நேரம் : 0900 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 09.01.2018 Time நேரம் : 09.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 4 கி.மீ வட கிழக்கு.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகம், கோரிமேடு, சேலம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. S. அனில்குமார்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. சோமன்.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 48/2018
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் வியாபாரி.
   (g) Address : முகவரி 5/140, சண்முகராஜ்நகர் காலனி, அம்மாபேட்டை, சேலம்-14.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   ① திரு. வடிவேல் நாராயணன், தொழிலாளர் ஆய்வாளர் / சட்டமுறை எடை அளவு - நிலைகட்டுப்பாடு அதிகாரி, சேலம்.
   ② திருமதி. ஹேமலதா, உதவி தொழிலாளர் ஆய்வாளர், தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகம், சேலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு –

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) –

விபரங்கள் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS………………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
9.1.18 at 14.45 Hrs.

Name: பெயர் திரு. C.R. பூபதிராஜன்.
Rank: நிலை காவல் ஆய்வாளர், ………………No. எண் ………
ஊதகமண்டலம் சேலம்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

சமர்ப்பிக்கப்படுகிறது

09.01.2018ம் தேதி காலை 09.00 மணிக்கு S.அனில்குமார் (48), S/o சோமன், 5/140, காமராஜ் நகர் காலனி, அம்மாபேட்டை, சேலம்–14 என்பவர் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு

அனுப்புதல் S.அனில்குமார்(48), S/o சோமன், 5/140, காமராஜ் நகர் காலனி, அம்மாபேட்டை, சேலம்–14 பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம். ஐயா, நான் மேலே கண்ட முகவரியில் எனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் திருவனந்தபுரம் மாவட்டம் பரப்பில் என்ற கிராமமாகும். எனக்கு தமிழ் படிக்கவும் பேசவும் தெரியும். ஆனால் எழுதவராது. நான் கடந்த 1989ம் வருடம் தொழில் விசயமாக சேலத்திற்கு வந்து இங்கேயே தங்கி தொழில் செய்து வந்தேன். அதன்பிறகு கடந்த 2010ம் வருடம் முதல் தமிழ்நாடு வனத்துறையில் சேலம் வன பாதுகாப்பு படையில் தற்காலிக ஓட்டுநராக வேலை செய்து வந்தேன். 2015 ம் வருடத்திற்கு பிறகு எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தொடர்ந்து மேற்படி ஓட்டுநர் வேலைக்கு செல்ல முடியவில்லை. எனவே, நான் சொந்தமாக மூலிகை ஹேர் ஆயில் மற்றும் அழகு சாதன பொருட்களை தயார் செய்ய முடிவு செய்து சேலம் மாவட்டம் மின்னாம்பள்ளி கிராமத்தில் கதவு எண்.11/180–A என்ற முகவரியில் உள்ள கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து அன்சயா பார்மா என்ற பெயரில் பதிவு செய்துள்ளேன். மேற்படி மூலிகை ஹேர் ஆயில் மற்றும் அழகு சாதன பொருட்களை சட்டமுறை எடை அளவு (பொட்டல பொருட்கள்) விதிகளின் கீழ் பேக்கேஜ் செய்வதற்கு உரிமம் வேண்டி கடந்த 21.7.2017ந்தேதி சேலம் கோரிமேட்டில் உள்ள தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகத்தில் சட்ட முறை எடை அளவு துணைக் கட்டுபாட்டு அதிகாரிக்கு முகவரியிட்டு ஒரு விண்ணப்பம் கொடுத்தேன். அத்துடன் நான் அன்றே ரூ.500/– ஐ சேலம் சார்நிலை அலுவலகத்தில் செலுத்தி அதற்கான சலான் மற்றும் வாடகை ஒப்பந்த பத்திர நகல், கட்டிட அனுமதி நகல், வீட்டு வரி ரசீது நகல், மின்சார கட்டண ரசீது நகல், தற்காலிக GST பதிவு சான்றிதழ் நகல் மற்றும் எனது LESO Herbal Hair Oil என்ற பெயரில் சென்னையில் பெற்ற டிரேட் மார்க் பதிவு சான்றிதழ் நகல் ஆகியவற்றை இணைத்து கொடுத்தேன். அதற்கு முன்பாக சென்னையில் உள்ள மாநில டிரக் லைசென்ஸிங் அத்தாரிட்டிக்கு விண்ணப்பித்து மேற்படி பொருட்கள் தயார் செய்ய அதற்கான உரிமத்தையும் பெற்றுள்ளேன். நான் பேக்கேஜ் லைசென்ஸ் கேட்டு சேலம் கோரிமேட்டில் உள்ள தொழிலாளர் நல அலுவலகத்தில் எனது தொழிற்சாலை அமைந்துள்ள மின்னாம்பள்ளிக்கு தற்போது பொறுப்பு அலுவலராக உள்ள உதவி தொழிலாளர் ஆய்வாளர் அவர்களிடம் பலமுறை நேரில் சென்று பார்த்து எனது பேக்கேஜிங் உரிமம் பற்றி கேட்டு வந்தேன். உதவி தொழிலாளர் நல ஆய்வாளராக பணியாற்றி

(5)

வரும் ஹேமலதா அவர்கள் என்னிடம் எனது தொழிற்சாலையை நேரில் பார்வையிட்ட பின்னர் தொழிலாளர் ஆய்வாளர் மூலமாக சென்னை கட்டுபாட்டு அலுவலருக்கு அனுப்பி உரிமம் பெற்று தர ஏற்பாடு செய்வதாக சொல்லி வந்தார். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் மேற்படி ஹேமலதா மின்னாம்பள்ளியில் உள்ள எனது தொழிற்சாலைக்கு நேரில் வந்து பார்வையிட்டுவிட்டு சென்றார். அதன் பிறகு எனது பேக்கிங் லைசென்ஸ் சம்மந்தப்பட்ட விண்ணப்பத்தின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் வைத்திருந்ததால் கடந்த 11.12.2017 ந் தேதி நான் செல்போன் மூலமாக மேற்படி ஹேமலதா அவர்களை தொடர்பு கொண்டு எனது மேற்படி விண்ணப்பம் குறித்து கேட்டபோது அவர் எனது விண்ணப்பத்தை பரிந்துரை செய்து சென்னை அனுப்பி உரிமம் பெற்றுத்தர தனக்கும், தொழிலாளர் ஆய்வாளருக்கும் ரூ.10,000/–ம் தனியாக கொடுக்கவேண்டும் என்றும், அவ்வாறு கொடுத்தால் தான் மேற்படி உரிமத்தை பெற்றுதா முடியும் என்றும் கூறினார். பிறகு அடுத்த நாள் 12.12.17ந் தேதி நான் மீண்டும் மேற்படி உதவி தொழிலாளர் அலுவலர் ஹேமலதா அவர்களை அவர்களது அலுவலத்தில் சுமார் பகல் 12.30 மணியளவில் நேரில் சந்தித்து எனது உரிமம் பற்றி கேட்டபோது அவர் தான் கேட்டபடி ரூ.10,000/–த்தை கொடுத்தால் தான் சென்னை கட்டுபாட்டு அதிகாரிக்கு பரிந்துரை செய்து உரிமம் வழங்க ஏற்பாடு செய்ய முடியும் என்றும் கூறினார். நான் அதற்கு தற்போது எனக்கு எந்த வேலையும் இல்லாததால் வருமானம் எதுவும் இல்லையென்றும், வீட்டு வாடகை தொழிற்சாலை வாடகை ஆகியவற்றை கொடுக்கவே இயலாத நிலையில் உள்ளேன் என்றும் என்னால் அவ்வளவு தொகை கொடுக்க முடியாது என்றும் கூறினேன். அதற்கு அவர் தான் கேட்ட தொகை ரூ.10,000/–ஐ கொடுத்தால் தான் வேலையாகும் என்றும் கூறி வேண்டுமென்றால் தொழிலாளர் ஆய்வாளர் அவர்களை நேரில் பார்த்து உங்கள் கஷ்டங்களை சொல்லுங்க என்று சொன்னார். அன்று தொழிலாளர் ஆய்வாளர் அவர்களை என்னால் சந்திக்க இயலவில்லை. பிறகு ஒரிருமுறை மேற்படி ஹேமலதாவை செல்போனில் தொடர்பு கொண்டு கேட்டபோதும் அதே காரணத்தையே கூறி வந்தார். அதனால் நேற்று 08.01.2018ம் தேதி மாலை சுமார் 4.30 மணிக்கு மேற்படி தொழிலாளர் ஆய்வாளர் அவர்களை பார்ப்பதற்காக அவரது அறைக்கு சென்றேன். அவர் அலுவலகத்தில் இல்லை. நான் அங்கேயே காத்திருந்தபோது மாலை சுமார் 6.30 மணி அளவில் தொழிலாளர் ஆய்வாளர் திரு.லட்சுமி நாராயணன் அவர்கள் தனது அலுவலகம் வந்து தனது அறைக்கு சென்றார். நான் அவரை அவாது அறையில் நேரில் சந்தித்து எனது பேக்கேஜ் லைசைன்ஸ் சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர் உதவி தொழிலாளர் ஆய்வாளர் ஹேமலதா அவர்களை பார்த்தீர்களா என்றும் அவர் என்ன சொன்னார் என்றும் என்னிடம் கேட்டார். அதற்கு நான் அவர் உங்களை பார்க்க சொன்னதாக சொன்னார் என்று கூறினேன். உடனே அவர் அதே அலுவலகத்தில் வேறு ஒரு

7

அறையில் அமர்ந்திருந்த ஹேமலதா அவர்களை வரச் சொன்னார். அவர் வந்த பிறகு மேற்படி லட்சுமி நாராயணன் அவர்கள் ஹேமலதாவிடம் என்னை காட்டி இவரிடம் எவ்வளவு சொன்னீர்கள் என்று கேட்டார். அதற்கு ஹேமலதா எல்லோருக்கும் சொல்வது போல ரூ.10,000/– கொடுக்க வேண்டுமென்று தான் சொன்னதாகவும், அதற்கு அவர் தனது கஷ்டங்களை சொல்லி வருகிறார் என்றும் சொன்னார். அதற்கு லட்சுமி நாராயணன் அவர்கள் பைல் தன்னிடம் தான் உள்ளது என்றும் கேட்ட பணத்தை கொடுத்தால் உடனடியாக லைசென்ஸ் பெற்றுதர முடியும் என்றும் உங்களுக்கு முன் விண்ணப்பங்கள் கொடுத்தவர்கள் எல்லாம் லைசென்ஸ் வாங்கிவிட்டார்கள் என்றும் சொன்னார். நான் இன்னும் தொழிலே ஆரம்பிக்கவில்லை என்றும், தற்போது எந்த வேலையும் இல்லாமல் இருப்பதால் என்னால் தற்போது அவ்வளவு தொகை கொடுக்க முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் உங்களால் எவ்வளவு தான் கொடுக்க முடியும் என்று கேட்டார். நான் நீங்களே சொல்லுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் ஹேமலதா எவ்வளவு சொல்கிறாரோ அவ்வளவு கொடுத்துவிட்டு மீதி தொகையை லைசென்ஸ் வரும்போது கொடுத்துவிடுங்கள் என்று சொல்லி என்னையும் ஹேமலதா அவர்களையும் போக சொல்லிவிட்டார். நாங்கள் இருவரும் அவரது அறையை விட்டு வெளியில் வந்தபோது ஹேமலதா அவர்கள் என்னிடம் உங்களால் தற்போது எவ்வளவுதான் கொடுக்க முடியும் என்று கேட்டார். நான் தற்போது மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இருப்பதால்தான் உங்களிடம் இவ்வாறு சொல்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் அப்படியானால் முதலில் நாங்கள் கேட்ட ரூ.10,000/– ரூபாய் பணத்தில் ரூ.2000/–த்தை மட்டுமாவது நாளை கொண்டு வந்து தொழிலாளர் ஆய்வாளர் அவர்களிடமோ அல்லது என்னிடமோ கொடுத்துவிடுங்கள், மீதி ரூ.8000/–த்தை லைசென்ஸ் வரும் போது கண்டிப்பாக கொடுத்துவிட வேண்டும் என்றும் சொன்னார். அதற்கு நான் வேறுவழியில்லாமல் சரியென்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு, தொழிலாளர் ஆய்வாளர் லட்சுமி நாராயணன் அவர்களுக்கும், உதவி தொழிலாளர் ஆய்வாளர் ஹேமலதா அவர்களுக்கும் அவர்கள் கேட்ட லஞ்சம் கொடுத்து நான் தயாரிக்கும் பொருட்களுக்கு பேக்கேஜிங் லைசென்ஸ் பெற விருப்பம் இல்லை எனவே அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd xxxxxx 09.01.2018. (S.Anilkumar).

Sir, Received the above computer typed complaint on 09.01.2018 at 09.00 hrs and registered a preliminary enquiry in PE.05/2018/LAB/SL at 10.30hrs on 09.01.2018 Sd xxxx 09.01.2018. (C.R.BOOPATHIRAJAN), INSPECTOR OF POLICE, V&AC, SALEM.

During verification, the allegation mentioned in the complaint is found to be genuine. Demand of illegal gratification was confirmed through the

(9)

sources. Hence, I registered a case in Salem Vigilance and Anti-Corruption Cr.No.2/AC/2018 u/s 7 of PC Act 1988 at 12.30 hrs today on 09.01.2018 and took up for investigation. Sd xxxx 09.01.2018 (C.R.BOOPATHIRAJAN), INSPECTOR OF POLICE, V&AC, SALEM.

Original FIR along with original typed complaint of S.Anikumar, S/o Soman, 5/140, Kamaraj Nagar Colony, Ammapettai, Salem-14 is submitted to the Special Judge for trial of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

9.1.18

(C.R.BOOPATHIRAJAN),
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.